# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

### உற்சாகத்துடன் நடைபெற்ற காரைக்குடி மாவட்ட செயற்குழு

அன்பார்ந்த தோழர்களே,

BSNL ஊழியர் சங்கத்தின் காரைக்குடி மாவட்ட செயற்குழு ராமநாதபுரம் தொலைபேசி நிலையத்தில் 01.04.2016 அன்று மாவட்ட தலைவர் தோழர் M.பூமிநாதன் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. 50க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்துக் கொண்ட இந்தக் கூட்டத்தினை BSNL CCWF சங்கத்தின் அகில் இந்திய உதவி பொது செயலாளர் தோழர் C.பழனிச்சாமி துவக்க உரையாற்றினார். தனது உரையில் அவர் அகில இந்திய சங்கத்தின் சாதனைகளை எடுத்துரைத்தார். சங்கத்தின் காரைக்குடி மாவட்ட செயலாளர் தோழர் மகாலிங்கம் தனது அறிமுக உரையில் காரைக்குடி மாவட்டத்தில் நமது தோழர்கள் எவ்வாறு வாக்குகளை திரட்டுவது என எடுத்துரைத்தார். AIBDPA சஙகத்தின் மாவட்ட செயலாளர் தோழர் சுப்ரமணியன் நமது சங்கத்தின் செயல்பாடுகளை எடுத்துரைத்தார். பின்னர் BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் கடந்த மூன்றாண்டுகளில் BSNL ஊழியர் சங்கம் செய்த சாதனைகளையும், நிறுவனத்தை பாதுகாக்கவும் செய்து வரும் நடவடிக்கைகளை எடுத்துரைத்தார். பின்னர் ராமநாதபுரம் கிளை செயலாளர் தோழர் லோகநாதன் நன்றி கூறி கூட்டத்தை நிறைவு செய்தார். காரைக்குடி மாவட்டத்தில் 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பில் நமது உறுப்பினர் எண்ணிக்கையை விட அதிக அளவில் ஊழியர்களை வாக்களிக்க செய்வோம் என்ற உறுதியோடும் உற்சாகத்துடனும் கூட்டத்தில் பங்கேற்ற தோழர்கள் கலைந்து சென்றனர்.

நல்லதொரு கூட்டத்தை ஏற்பாடு செய்த காரைக்குடி மாவட்ட சங்கத்தையும், உற்சாகத்துடன் பங்கேற்ற தோழர்களையும் தமிழ் மாநில சங்கம் பாராட்டுகிறது.

உணவு இடைவேளையின் போது மத்திய சங்கத்தின் அறைகூவலான குறைந்த பட்ச PLIஐ வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதில் பங்கேற்ற மாநில செயலாளர் நிர்வாகம் மற்றும் NFTE சஙகத்தின் கூட்டு சதியை அம்பலப்படுத்தியும், தொடர்ச்சியாக வருவாயை அதிகப்படுத்த அரும்பாடுபட்டு வரும் ஊழியர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் கண்டிப்பாக BSNL நிர்வாகம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கைகளை விளக்கி பேசினார்.



